REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04)

2 PAGES பக்கம் 1

CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

நமக்கு நாமே பாதுகாப்பு திட்டத்தில் பங்களிப்பு உறுப்பினராக உடனே இணைந்து, போட்டோ வீடியோ கலைஞர்களின் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்வீர்!!

- CVPA NNT

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 23 CLICK - 01

JUNE 2026 ₹. 1

# CVPA NNT-ல் இணைந்து 2 லட்சம் இலக்கை எட்டுவோம்

இந்த நிர்வாகம் பொறுப்பேற்ற பிறகு நாம் நமது கலைஞர்களுக்கு பயனுள்ள ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு (CVPA NNT) திட்டத்தை முதல் செயற்குழுவின் ஒப்புதலோடு அறிமுகம் செய்தோம். இந்தத் திட்டத்திற்கு உறுப்பினர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

நமது சங்கம் என்பது நாம் கொடுக்கக் கூடிய சந்தாவில் தான் செயல்படுகிறது. இதை வைத்துக் கொண்டு, பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு நம்மால் தொடர்ந்து பெரிய உதவிகள் எதையும் நாம் செய்ய முடியாது.நமது சங்கத்திற்கு வேறு எதுவும் வருமானம் கிடையாது. குடும்ப விழா போன்ற ஏனைய நிகழ்ச்சிகளை நாம் நன்கொடையாளர்களை நம்பிதான் இருக்கிறோம். சங்கத்தில் வேறு ஏதேனும் வகையில் வருமானம் ஈட்ட வேண்டும் என்று சொன்னால், சங்க விதிகள் அதற்கு முதலில் இடம் தராது. இதை முதலில் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவேளை இதற்கு மாற்று வழி ஏதேனும் இருந்தால் உங்கள் ஆலோசனைகளை வரவேற்கிறோம்.

நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டம் (CVPA NNT) ஆயிரம் உறுப்பினர்களை இணைக்க வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து இவர்களிடம் இருந்து பெறப்படும் பணம் (தலா 200 ரூபாய்) பாதுகாப்பு நிதியாக சேர்ந்து வைத்துக்கொண்டு அதில் இருந்து இரண்டு லட்சம் ரூபாய் பாதிக்கப்பட்ட CVPA NNT உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு வழங்க வேண்டும் என்கிற நோக்கத்தில் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும். இந்த ஒன்றரை ஆண்டில் இதுவரை 7 குடும்பங்களுக்கு CVPA NNT நிதி வழங்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு குடும்பத்திற்கு விரைவில் CVPA NNT நிதி விரைவில் வழங்க இருக்கிறோம்.

CVPA NNT யில் இப்பொழுது வெகு குறைவான உறுப்பினர்களே பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த திட்டத்தை வாழ்த்தி பேசுகிறவர்களும் உண்டு. தூற்றி பேசுபவர்களும் உண்டு. ஒருவர் இந்தத் திட்டத்தில் இணையாவிட்டாலும் பரவாயில்லை, புதியதாக இணைய விரும்பும் உறுப்பினர்களுக்கு வழிவிட்டு நில்லுங்கள். யாரும் CVPA NNT குறித்து தவறாக பிரச்சாரம்செய்ய வேண்டாம்.இதன்காரணமாக CVPA NNT கொஞ்சம் பின்னடைவை சந்தித்து வருவது நன்றாகவே இந்த நிர்வாகத்திற்கு தெரிகிறது. இத் திட்டத்தின் நோக்கம் இரண்டு லட்ச ரூபாய் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு வழங்க வேண்டும் என்பதே. எல்லோரும் சேர்ந்து எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்து இருந்தால் இதை நூறு சதவிகிதம் நிச்சயமாக சாத்தியமாக்கி காட்டிஇருப்போம்.

CVPA NNT திட்டம் முழுக்க முழுக்க ஆன்லைன் வழியாகவே நடக்கிறது. முழு தகவலும் cvpannt.com -ல் வெளிப்படை தன்மையுடன் வெளியிடப்படுகிறது.

சேவை மனப்பான்மையுடன் CVPA NNT-ல் இணையும் உறுப்பினர்கள் கடைசி வரை பங்களிப்பாளராகவே இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். யாரும் பயனாளிகள் ஆகிவிடக்கூடாது என்றும் எண்ணுகின்றோம். ஆனாலும், மரணம் என்பது எப்போது நிகழும் என்று யாராலும் கணிக்க முடியாது. ஆண்டவன் தான் அதை தீர்மானிக்கின்றான். எல்லோரது உடல்நிலையும் நல்ல ஆரோக்கியத்துடன், சுபீட்சமாகவும், நீண்ட ஆயுளோடு இருக்க வேண்டும். இருந்தாலும் அதையும் தாண்டி சில நேரங்களில் சோக நிகழ்வு ஏற்பட்டு விடுகிறது. எல்லா குடும்பங்களும் பொருளாதார ரீதியாக பலமான குடும்பமாக இருப்பதில்லை.குடும்ப சேமிப்பும் சொல்லிக் கொள்ளும்படி இருப்பது இல்லை. இது போன்றவர்களுக்கு, CVPA NNT உறுப்பினர்கள் தரும் சின்ன சின்ன தொகையை சேர்த்து வைத்துதான்,ஒரு லட்சமோ அல்லது இரண்டு லட்சமோ பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ஒரு பெரும் தொகையாக வழங்குகிறோம்.ஒரு CVPA NNT உறுப்பினர் இறந்ததும், நமது சங்கத்தில் இருந்து உடனடியாக அவர்கள் குடும்பத்திற்கு NNT நிதியாக இவ்வளவு பணம் கொடுக்கப் போகிறோம். எப்போது பணம் கொடுக்க வர வேண்டும். என்கிற தகவல் NNT உறுப்பினர்களின் வாரிசு தாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. எங்கள் அனுபவத்தில் நாங்கள் பார்த்தவரை இந்தத் தகவலைக் கேட்டு ஏற்கனவே பேரதிர்ச்சியில் இருக்கும் அவர்கள், அனைவருமே, CVPA NNT திட்டத்தால் பயன்பெறப் போகும் அவர்கள் வியந்து போகின்றனர். உணர்ச்சிகரமான அந்த தருணத்தை விவரிக்க வார்த்தைகள் இல்லை. CVPA NNT திட்டத்தைப் பொறுத்தவரை, நமது கலைஞர்களின் குடும்பத்திற்கு நமது சங்கம் பாதுகாப்பாக அறனாக இருக்கிறது. NNT உறுப்பினர்களின் குடும்பத்திற்கு கடைசி வரை துணையாக நிற்கிறது. இதை மதித்து அந்த குடும்பம், நமது சங்கம் தரும் மரியாதையை, கௌரவமாக ஏற்றுக் கொள்கிறது.

CVPA NNT-ல் தற்போதுவரை 746 பேர் பயணித்து வந்தனர். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களில் பலர் தற்போது ஜீரோ பேலன்ஸ் என்கிற நிலையில் உள்ளனர். இந்த திட்டம் குறித்து இவர்களுக்கு போதுமான புரிதல் இல்லாத காரணத்தால் இவர்களாகவே இந்த திட்டத்தை விட்டு வெளியே போகும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.இது தவிர இவர்கள் CVPA NNT-ல் மீண்டும் இணைய 80 நாட்கள் காத்திருக்க வேண்டும். இதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வாட்ஸ்ஆப்பில் என்னுடைய வாய்ஸை கேட்டு, நிறைய பேர் பேசினார்கள்.பலபேர் என்னுடைய வாய்ஸை கேட்டு பணம் செலுத்தி உள்ளனர். என்னிடம் பேசிய சிலர் CVPA NNT குறித்து தகவல்கள் எதுவும் சரியாக வருவதில்லை என்கிற குறையை சொன்னார்கள். CVPA NNT உறுப்பினர்கள் அனைவருக்கும் வாட்ஸ்ஆப்பில் தனித்தனியாக தகவல் தெரிவிக்கப்படுகிறது. வாட்ஸ்ஆப் பார்க்கும் பழக்கம் இல்லாதவர்களுக்கு எந்த ஒரு தகவலும், தெரிய வாய்ப்பில்லை. தயவுசெய்து CVPA NNT வாட்ஸ்ஆப் நெம்பரை சேமித்து வைத்து அதில் வரும் தகவல்களை அவ்வப்போது பார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

CVPA NNT உறுப்பினர்கள் தங்கள் வேலட்டை உடனடியாக சரி பார்க்கவும்.இது குறித்து புரியாதவர்கள் சங்க செயலாளராகிய என்னை அல்லது சங்க நிர்வாகிகளை தொடர்பு கொள்ளவும்.உங்கள் சந்தேகங்களுக்கு தெளிவான பதில் கிடைக்கும்.உடனடியாக www.cvpannt.com வெப்சைட்டை ஓப்பன் செய்யவும் . இது ஓபன் ஆனதும் உங்கள். (CVPA ID நம்பரை) CVPA அடையாள அட்டை எண்ணை உள்ளிடவும். பிறகு , OTP எண் கேட்கும், இது நமக்கு கேட்வே (இதன் விவரம் பிறகு தெரிவிக்கப்படும்) கிடைக்கும் வரை தற்காலிகமாக 2025 என்கிற பொதுவான நம்பரை வைத்திருக்கிறோம். எனவே 2025 என்கிற எண்ணை உள்ளிடவும்.சைட் ஓப்பன் ஆனதும் உடனடியாக உங்கள் வேலட்டில் பணத்தை செலுத்தலாம். இந்த சைட்டில் சென்றால் யார் யார் எவ்வளவு பணம் செலுத்தி இருக்கிறார்கள். யாருக்கு எல்லாம் பணம் கொடுக்கப்பட்டது. நீங்கள் செலுத்திய பணம் குறிப்பிட்ட தேதியில் வந்து சேர்ந்ததா. இது போன்ற எல்லா விவரங்களும் இந்த வெப்சைட்டில் நீங்கள் பார்த்துக் கொள்ளலாம். இந்த விஷயத்தில் சங்க அலுவலக ஊழியர் கூட உங்களுக்கு உதவி செய்ய தயாராக இருக்கிறார்.

உங்கள் ஆலோசனைகள் எதுவாக இருந்தாலும் எங்களுக்கு கூறவும். மாற்ற வேண்டியதை மாற்றிக் கொள்கிறோம். எல்லோரும் ஒன்றாக சேர்ந்து செய்தால் மட்டுமே, CVPA NNT திட்டத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்த முடியும். இது நமது கலைஞர்களின் குடும்பங்களை பாது காக்க உருவாக்கப்பட்ட ஒரு உணர்வு பூர்வமான திட்டம்.கால தாமதமின்றி இன்றே CVPA NNT-ல் உறுப்பினராக சேர்ந்திடுங்கள்.

இப்படிக்கு

**P.துரைபாபு**

CVPA செயலாளர்

# திரு.ரவிச்சந்திரன் அவர்களின் குடும்பத்திற்கு CVPA NNT-ன் பாதுகாப்பு நிதி வழங்கப்பட்டது.!



சென்னை, படூர் பகுதியை சேர்ந்த CVPA வின் மூத்த உறுப்பினரும், வட சென்னை பகுதியின் முன்னாள் துணைத் தலைவருமாகிய, திரு. N. **ரவிச்சந்திரன்** (ID NO:317) அவர்கள் உடல் நலம் குன்றி இருந்த நிலையில் கடந்த 04.01.2026 அன்று இயற்கை எய்தினார்.இவர் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு CVPA NNT திட்டத்தின் பங்களிப்பு உறுப்பினராக இருந்து வந்தார்.எனவே இவரது குடும்பத்திற்கு CVPA NNT குடும்ப நல பாதுகாப்பு நிதியில் இருந்து 80,400 ரூபாய், 13.06.2026. அன்று திருமதி.ரவிச்சந்திரன் அவர்களிடம் சங்க நிர்வாகிகள் நேரில் சென்று வழங்கினார்கள். CVPA நிர்வாக குழு, செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் முன்னிலையில் இந்த நிதி அவரிடம் வழங்கப்பட்டது.

திரு. ரவிச்சந்திரன் அவர்கள் நமது சங்கத்தின் மிக முக்கியமான மூத்த உறுப்பினர் ஆவார்.நமது சங்கத்தின் துணைத் தலைவராக இருந்து CVPA வளர்ச்சிக்காக அதிகமாக குரல் கொடுத்த நல்ல மனிதர். மிகவும் திடகாத்திரமான, அதேசமயம் தைரியமான மனிதர். எந்த ஒரு விஷயத்திற்கும் பணிந்து போக மாட்டார். நமது கலைஞர்களின் நலனுக்காக அவர் எப்போதும் துணிந்து வந்து முன்னாள் நிற்பார். அவருடைய மறைவு என்பது எங்களுக்கெல்லாம் பேரிழப்பாகும். 20 ஆண்டு கால பழக்கம் எனக்கும் அவருக்குமானது. அதே சமயம் கடந்த ஆறு ஆண்டுகள் அவருடன் மிகவும் நெருக்கமான நட்பு இருந்தது. தனது மகள் மருத்துவராகி இருக்கும் இந்த மகிழ்ச்சியான நேரத்தில் அவர் இல்லாத குறை எல்லோருக்கும் இருக்கும்.ஆனாலும்,அவருடைய மனைவி தன் மகளுக்கு துணையாகவும்,நல்ல வழிகாட்டியாகவும் இருந்து இருக்கின்றார் என்று நினைக்கின்ற போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. அதற்காக திருமதி ரவிச்சந்திரன் அவர்களை மனதார பாராட்டுகிறோம்.



**V .புருஷோத்தமன்,**
CVPA தலைவர்.

சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம் சார்பாக CVPA NNT குடும்ப நல பாதுகாப்புதிட்டம் தொடங்கப்பட்டது.இந்தத் திட்டம் தொடங்கும் போது பல்வேறு மாவட்ட சங்கங்களிடம் ஆலோசனை பெறப்பட்டது. இதற்கு திரு.ரவிச்சந்திரன் அவர்கள்,எங்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்து ஆலோசனை வழங்கியதுடன், CVPA NNT திட்டம் சிறப்பாக செயல்பட ஒரு வழிகாட்டியாகவும் அவர் இருந்தார். ஆனால், அவரே இந்த திட்டத்திற்கு பயனாளியாக மாறுவார் என்று நாங்கள் நினைத்துக் கூட பார்க்கவில்லை. இது எங்கள் எல்லோருக்கும் வருத்தத்துக்குரிய விஷயம் தான். இதுவரை CVPA NNT திட்டத்தின் மூலம் ஏழு குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. நிறைய உறுப்பினர்கள் இந்த திட்டத்திற்கு உதவ முன் வர வேண்டும். எல்லோரும் பங்களிப்பாளராகவே இருக்க வேண்டும். யாரும் பயனாளி ஆகி விடக்கூடாது என்றும் நினைக்கிறோம். ஆனால் ஒரு குடும்பத்தில் இருக்கும் சூழ்நிலை வேறு ஒரு குடும்பத்தில் இருப்பதில்லை. அதுபோன்ற ஒரு சூழ்நிலையில், பொருளாதார ரீதியாக CVPA பாதுகாப்பு நிதி அந்த குடும்பத்திற்கு கண்டிப்பாக உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.



P.**துரைபாபு,**
CVPA செயலாளர்

CVPA வின் வடசென்னை பகுதியில் அனைவரும் மதிக்க கூடிய CVPA உறுப்பினராக திரு. ரவிச்சந்திரன் அவர்கள் இருந்து வந்தார்.CVPA தேர்தலில் வடசென்னை துணைத் தலைவர் பதவிக்காக நாங்கள் இருவரும் போட்டியிட்டோம். போட்டி,பொறாமை இன்றி ஆரோக்கியமான தேர்தலாகவே அது இருந்தது. அந்த தேர்தலில் நான் வெற்றி பெற்று அவர் தோல்வி அடைந்து இருந்தாலும், என்னை நேரில் சந்தித்து மிகவும் பாராட்டினார். வட சென்னை பகுதி உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்காக என்னிடம் நிறையவே பேசுவார். எனக்கும் அவருக்கும் இந்த விஷயத்தில் நிறைய கருத்து வேறுபாடு இருக்கும். அதை நாங்களே பேசி தீர்த்துக் கொள்வோம். அவருடைய இழப்பு என்பது வடசென்னை CVPA உறுப்பினர்களுக்கு பேரிழப்பாகும். அவருடைய மகள் மருத்துவ படிப்பு முடித்து, டாக்டர் ஆகி இருப்பது உண்மையிலேயே எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியே. இந்த சாதனையில் திரு. ரவிச்சந்திரன் அவர்களின் லட்சியமும் அடங்கியிருக்கிறது. அவரது லட்சியத்தை நிறைவேற்றிய அவரது தங்கமகளுக்கு நமது சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.



**கௌவுஸ் பாட்ஷா,**
CVPA வடசென்னை துணைத்தலைவர்.

## மருத்துவ உதவி



வடசென்னை சௌகார்பேட்டை பகுதியை சேர்ந்தவரும்,CVPA பகுதி செயலாளருமாகிய,ராசி ஸ்டூடியோ ஹரிகிருஷ்ணன் அவர்களுக்கு வலது காலில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக மருத்துவரின் ஆலோசனைப்படி தொழிலுக்கு செல்லாமல் வீட்டில் ஓய்வெடுத்து வருகிறார். இவரை சங்க நிர்வாகிகள் நேரில் சென்று நலம் விசாரித்தனர். இவருக்கு நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானப்படி மருத்துவ உதவி தொகை 5000 ரூபாய் வழங்கப்பட்டது. சங்க நிர்வாகிகள் பகுதி செயலாளர் மற்றும் சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் முன்னிலையில் இந்த தொகை ஹரிகிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

## வருந்துகிறோம்

மத்திய சென்னை, அண்ணாநகர் பகுதியை சேர்ந்த, CVPA-ன் ஆயுட்கால உறுப்பினர் ஜோதி போட்டோ ஸ்டுடியோ உரிமையாளர், திரு.P.J. **வெங்கடேசன்** அவர்கள், (CVPA ID NO.1493, LM, வயது 73.) 21-06-2026 அன்று இறைவனடி சேர்ந்தார், என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம். அன்னாரின் மறைவிற்கு சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கப்பட்டு,இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.பின்னர்



நமது பொதுக்குழு தீர்மானப்படி மரணம் அடையும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20,000 ரூபாய் அவருடைய குடும்பத்தினரிடம் வழங்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.




## லட்சியப் பயணம் தொய்வின்றித் தொடரும்...

டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ராஜராஜேஸ்வரி கல்வி குழுமங்களின் சார்பில் கல்வி உலகிலும், மருத்துவ மக்கள் சேவையிலும் தனக்கென தனி முத்திரை பதித்து வரும் எனது சேவையை பாராட்டி, கர்நாடக மாநிலத்தின் புகழ்பெற்ற ராஜீவ் காந்தி ஆரோக்கிய அறிவியல் பல்கலைக்கழகம் (RGUHS) தனது 28-வது ஆண்டு பட்டமளிப்பு விழாவில் மிக உயரிய கௌரவப் பட்டமான 'டாக்டர் ஆஃப் சயின்ஸ்சு (Doctor of Science & Honoris Causa) பட்டத்தை எனக்கு வழங்கி சிறப்பித்துள்ளது.

இந்த உயரிய கௌரவம் எனக்கு அளிக்கப்பட்ட பெரும் பாக்கியமாக கருதுகிறேன். நான் செய்யும் கல்வி பணிக்கும், சமூக சேவைக்கும் கிடைத்துள்ள இந்த அங்கீகாரம், இன்னும் கூடுதல் பொறுப்புடன் உழைக்க எனக்கு ஊக்கமளிக்கிறது.

இந்தத் தருணத்தில், எனது பயணத்திற்குப் பக்கபலமாக இருக்கும் எனது குடும்பத்தினருக்கும், பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஊழியர்கள், மாணவச் செல்வங்கள் மற்றும் எனக்கு எப்போதும் ஆதரவளிக்கும் பொதுமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துகொள்கிறேன்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வழியில், ஏழை எளிய மாணவர்களுக்கும் தரமான கல்வி சென்றடைய வேண்டும் என்ற எனது லட்சியப் பயணம் தொய்வின்றித் தொடரும்.




தென் சென்னை-எஸ்2, பல்லாவரம் பகுதியை சேர்ந்தவரும், பல்லாவரம் பகுதிச் செயலாளருமாகிய, நமது CVPA உறுப்பினரான, திரு.முரளி-திருமதி. கலைச்செல்வி இவர்களின் மகள் செல்வி.ரேணுகா-செல்வன்.பவன் ஆகிய இருவருக்கும் நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்வில்,நமது சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், CVPA பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



வடசென்னை பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு. மோகன்-திருமதி.அருள்மொழி தம்பதியினரின் மகள் செல்வி.பாரிநேத்தாவின் பூப்புனித நீராட்டு விழாவில் நமது சங்கத்தின் சார்பாக சங்க நிர்வாகிகள்,பகுதி செயலாளர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட னர்.



மத்திய சென்னை, பட்டாளம் பகுதியை சேர்ந்த, வீடியோ டுடே உரிமையாளர், திரு.G.ரவிச்சந்திரன் - திருமதி.R.லக்ஷ்மி தேவி தம்பதியினரின் மகள் செல்வி.R.ஆர்த்தி மற்றும் செல்வன்.J.R.யோகேஷ் இவர்களுடைய திருமண வரவேற்பு (27.06.2026) நிகழ்ச்சியில் CVPA நிர்வாகிகள்,பகுதி செயலாளர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.




**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351